அதனால் இந்த இடத்திலேயே—

Sir, the spirit of all these rules is that an issue of privilege should get precedence over all other business. That is because the privilege of the House and the privilege of every Member of this House are sacrosanct. They get precedence. They are more sacrosanct, more sanctified than any other business. That is the spirit of these rules. So, I would request, Mr. Deputy Speaker, to take up this question immediately. It need not take much time to consider this matter because the issue of this privilege motion arose during the sitting. It is a very simple matter. It is not a very detailed matter. There is no need for any enquiry. In fact, it is a very simple matter. One does not know if and when the Assembly will meet again. The purpose of the motion will not be served, if it is postponed. So, I would request that it be taken up even now before any other business is taken up.

MR. DEPUTY SPEAKER: I would say that as the Chair, I have to go through all these things and find out whether a *prima facie* case has been made out or not. For that, I require some more time. I must know what question the Hon. Member has given and what answer the Hon. Minister has given. To know all these things, I have to go through the records. What question the Hon. Member has given to the department, I have to find out. All these things are there. Therefore, I will take it up after considering all these things.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரிப் பருப்புத் **தொழிற்சாலைகள் மூடப்பட்டது குறித்தும், தொழிலாளர்கள் பாதிப்பும் குறித்தும்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேரள அரசு அந்த மாநிலத்திலிருந்து முந்திரி அனுப்புவதைத் தடை செய்துள்ள காரணத்தால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லா முந்திரித் தொழிற்சாலைகளும் மூடப்பட்டு விட்டதால், 40,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையிழந்து, அதனுல் அம்மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க வேண்டும் என்று பேரவையின் 42-ம் விதியின் கீழ் திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்

கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது இருக்கும் நூற்றுக்கும் அதிகமான முந்திரிப்பருப்புத் தொழிற்சாலைகள் செயல்பட்டுக் கொண் டிருந்தன. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்தத் தொழிற்சாலைகளைத் தவிர வேறு எந்தவிதமான தொழிற் சாலைகளும் இல்லை. அங்குள்ள மக்களுக்கு தொழில் வாய்ப்பு இந்தத் தொழிற்சாலைகளின் மூலமே கிடைக்கின்றதே தவிர வேறு வழி கிடையாது என்பதை இந்த அரசாங்கம் நன்றாக அறிந்திருக்கிறது. இந்த முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளுக்கு "ரா நட்ஸ்" (raw nuts) கிடைப்பது கேரள மாநிலத்திலிருந்து இந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளை நடத்துகின்ற முதலாளிகள் இந்த அரசாங்கத்தின் வழியாக அந்த "ரா நட்ஸ்"-களை வரவழைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது பல வேறுபாடுகள் காரணமாக அந்த மூலப்பொருள் அவர்களுக்கு வருவதில் சங்கடம் ஏற்பட்டுள்ளது.

அதோடு அநேகமாக அனைத்து முதலாளிகளும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு இந்தத் தொழிற் சாலைகளை நடத்துவதற்கு லைசென்ஸ் அங்கேதான் இருக்கிறது. ஆகவே, கேரள மாநிலத்தைச் சார்ந்துதான் இந்தத் தொழிற் சாலைகள் நடைபெற்றன. இப்போது திடீரென்று காரணம் தெரியவில்லை, அங்கிருந்து மூலப் பொருளான ரா நட்ஸ் கொண்டு வருவதற்கு கேரள மாநிலம் தடை விதித்ததாகத் தெரிகிறது. இப்போது சில நாட்களாக ரா நட்ஸ் வாராததால் இயங்கிக் கொண்டிருந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஏறத்தாழ நாற்ப தாயிரம் தொழிலாளர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு தேவை யான நடவடிக்கைகளை மேற்கொண்டு அங்கே ரா நட்ஸ் கிடைப் பதற்கும், கேரள அரசாங்கம் விதித்த தடையைத் தளர்த்து வதற்கும் அந்த அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மத்திய சர்க்காரோடு தொடர்பு கொண்டு அந்தத் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு

ரா-நட்ஸ் வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, இது முக்கியமான பிரச்சினை. ஏறத்தாழ 40, 50 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற பிரச்னை. அதற்கு ஒரு முடிவு காண்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, முந்திரிக் கொட்டையை நமது மாநிலத்திற்குள் கொண்டு வருவதை தடை செய்து கேரள அரசு ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பது உண்மை. நமது மாநிலத்தில் உள்ள இந்த முந்திரிப் பருப்புத் தொழிற்சாலைகளுக்கு இங்கே விளையும் முந்திரிப் பழங்கள் போதுமானதாக இல்லை. நாம் பெரும்பாலும் கேரளா, கருநடகம் கோவா முதலிய மாநிலங்களிலிருந்து கிடைக்கும் மூலப் பொருளைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. கேரள அரசு பிறப்பித்த இந்த உத்தரவு குமரி மாவட்டத்திலுள்ள தொழிலைப் பாதித்திருக்கிறது என்பது உண்மை. இந்த நெருக்கடியைத் தவிர்க்க, தொழிலாளர்களின் துயரைப் போக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது. இதுபற்றி கேரள தொழிலாளர் நல அமைச்சர் திரு. புருஷோத்தமன், தொழில், தொழிலாளர் நல இலாகா செயலாளர்கள், தொழிலாளர் நல ஆணையர் ஆகிய அனைவரும் வரும் 21-11-1975 அன்று கன்னியாகுமரியில் கூடி பேசவிருக்கிறோம். பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அவசியம் ஏற்பட்டால் மத்திய அரசையும் தலையிடக் கோரி ஆவன செய்யலாம் என்று எண்ணுகிறேன்.

கடந்த 10-11-1975 நான் குமரி மாவட்டத்திலே இந்தத் தொழிலதிபர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். அவர்களும் 21-11-1975 அன்று கேரள அமைச்சருடன் நடக்கவிருக்கும் பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ளுகிறார்கள். ஆகவே நிலைமையை உணர்ந்து அரசு ஆவன செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுபற்றி தொழில் துறை அமைச்சரையும் கலந்து ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.